
# உடன்பிறப்பே... 70

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த பேராசிரியர் மு.பி.பாலசுப்பிரமணியன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

ஓவியம் : ரவி பேலட்

# பேரா. மு.பி.பாலசுப்பிரமணியன் “இளைய தலைமுறையின் திசைகாட்டி!”



காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி முன்னாள் முதல்வர், சென்னை பச்சையப்பன் கல்லூரியின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் என 35 ஆண்டுகள் கல்விப் பணியாற்றியவர், முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியன். சுருக்கமாக மு.பி.பா. கல்விப் பணியில் இருந்தாலும், அவர் கழக உடன்பிறப்பு என்பதற்கு, அவர் ஆற்றிய பணிகளே கட்டியம் கூறும்.

எந்தத் துறையில் ஈடுபட்டாலும், கழக உணர்வில் வளர்ந்தோர், ‘கடலைவிட்டு நீங்காத படகுகளாக’ பயணப்பட்டிருந்தனர் என்பதற்கு மு.பி.பா அவர்களின் வாழ்க்கைப் பயணமே சான்று. அதனால்தான், அவரைப் போற்றிப் புகழ்ந்து, 2005-ஆம் ஆண்டில் முப்பெரும் விழா விருதுகளில், ‘புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்’ விருதினை அளித்துப் பெருமை சேர்த்தது தலைமைக் கழகம்.

அந்த நிகழ்ச்சியில் பேசிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மு.பி.பா குறித்து “கழக வளர்ச்சிப் பணிகளில் இளமைக் காலம் தொட்டு ஈடுபாடு கொண்டு, தொடர்ந்து தொண்டாற்றி வருபவர். அவரது எழுத்தாற்றல், இலக்கிய ஆய்வுத்திறன், கவித்திறன் ஆகிய பல்வேறு திறன்களும், கழக வளர்ச்சியில் அவர் கொண்டுள்ள ஈடுபாடும் இளைஞர் சமுதாயத்திற்குத் திசைகாட்டும்” என்றார்.

## கிளைக் கழகச் செயலாளர்

தென்காசி மாவட்டம், குத்துக்கல் வலசை ஊராட்சியில் அய்யாபுரம் என்கிற சிறிய கிராமத்தில் 16.05.1939 அன்று பிறந்தவர் பாலசுப்பிரமணியன். பெற்றோர் மு.பிச்சைமுத்து -பி.கனியம்மாள். அய்யாபுரத்துக்கு அருகில் உள்ள இலஞ்சியில் உயர்நிலைப்பள்ளியும், பாளையங்கோட்டையில் கல்லூரிக் கல்வியும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் முனைவர் பட்டமும் முடித்தவர்.

மாணவர் பருவத்திலேயே பேச்சுக் கலையில் ஆர்வம் காட்டிய மு.பி.பா, கல்லூரிக் காலத்தில் அரசியல் சிந்தனைகளுடன் வளரத் தொடங்கினார். அய்யாபுரம் கிராமத்தில் ‘முத்தமிழ் கலை மன்றம்’ என்கிற அமைப்பினைத் தொடங்கி, பகுத்தறிவு, சுயமரியாதை நோக்குடன் கழகப் பிரச்சாரங்களையும் முன்னெடுத்தவர்.

1961-ஆம் ஆண்டு, நெல்லையில் நடைபெற்ற, திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாவட்ட மாநாட்டின் பொருளாளராகப் பொறுப்பேற்று, சுற்றிச் சுழன்று நிதி திரட்டிய குறிப்புகள் உள்ளன. 1962-ஆம் ஆண்டு பாவேந்தர் நடத்திய **‘குயில்’** இலக்கிய இதழில் எழுதிய படைப்புகளுக்காக பாவேந்தர் அவர்களால் **‘பகுத்தறிவுப் பாவலர்’** எனும் விருது பெற்றவர். 1965-ஆம் ஆண்டுகளில் அய்யாபுரம் கிராமத்தில், அந்த ஊரின் கிளைக் கழகச் செயலாளர் என்கிற அடையாளத்துடன் இயங்கியவர்.

## ‘காஞ்சி’ இதழ்ப் பணி

முனைவர் படிப்புக்காக சென்னை வந்த காலத்தில், கழக மேடைகளில் தீவிரமாகச் செயல்படத் தொடங்கினார். பேரறிஞர் அண்ணா அவர்களின் ‘காஞ்சி’ இதழில் இரண்டு ஆண்டுகள் பொறுப்பாசிரியராக இருந்தவர். தமிழறிஞர்கள் டாக்டர் மு.வரதராசனார், டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை ஆகியோரை ஆசிரியராகக் கொண்டிருந்த இவர், தமிழ் இலக்கியச் செல்வங்களைக் கழகத்தின் வளர்ச்சிக்கு மாற்றும் ஆற்றல் கொண்டவராக மேடைகளைப் பயன்படுத்தத் தொடங்கினார்.

தான் பயின்ற பச்சையப்பன் கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கி, பின்னர், அந்தக் கல்லூரியின் முதல்வராகவும் பொறுப்பேற்றார். குறிப்பாக, 35 ஆண்டுகள் தமிழ் உணர்வையும், திராவிடச் சிந்தனைகளையும் கல்லூரி மாணவர்கள் மத்தியில் கொண்டு செல்லும் பணியாகக் கல்விப் பணியை மாற்றிக் கொண்டவர்.

> **“திராவிட இயக்கச் சிந்தனைகள் செழித்துப் பூத்து மணம் பரப்பும் மாபெரும் தோட்டமாகவே விளங்கியவர். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கழகத்தை விட்டுக் கொடுக்காமல் வாதம் செய்திடும் கொள்கைப் பிடிப்புள்ளவர்.**

## தமிழ் இலக்கியக் களம்

1968-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா முதல்வரானதும் நடத்திய உலகத்தமிழ் மாநாட்டில் பல பொறுப்புகளை ஏற்று, பேரறிஞர் அண்ணாவிடம் நற்பெயர் பெற்றதுடன், அந்த மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை அளித்து, இலக்கிய வரலாற்றில் இடம்பிடித்தவர். 1989-ஆம் ஆண்டில், மொரீஷியஸ் நாட்டில் நடைபெற்ற ஏழாவது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக கலைஞரின் அன்புடன் அங்கு சென்று கலந்துகொண்டவர்.

1992-ஆம் ஆண்டில் கோலாலம்பூரில் நடைபெற்ற இராவண காவிய மாநாட்டில் கலந்துகொண்டு, **‘நவீன தமிழ் இலக்கியத்துக்கு புலவர் குழந்தையின் கொடை’** எனும் ஆய்வுக் கட்டுரையை அளித்து, தான் எந்த நாளும் திராவிட ஆய்வாளர்தான் என்பதைக் குறிப்பால் உணர்த்தியவர் மு.பி.பா.

## பொறுப்புகளில் கழக முகம்

முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில் தமிழ் வளர்ச்சித்துறையில், அறிவியல் தமிழ் மன்றத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டு தமிழ் வளர்ச்சிப் பணியில், கலைஞருக்கு உறுதுணையாக நின்றவர்.

தமிழ் இலக்கியத்தில் பல அரிய நூல்களை இயற்றிய அவர், தமிழ்ச் செம்மொழி மத்திய நிறுவனத்தின் உறுப்பினராகச் சிறப்புமிக்க பணிகளைத் திறம்பட நிறைவேற்றி, கலைஞரின் கனவுகளில் ஒன்று நிறைவேற உறுதுணையாக நின்றவர்.

ஒன்றிய அரசின் திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினராகவும் பணியாற்றி கலைத் துறைக்கும் தன் கடமையை ஆற்றியவர்.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, சுவிட்சர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளுக்குச் சென்று அங்கு தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகளிலும் பங்கேற்று, தமிழ் மொழியின் பெருமைகளை உலகெங்கும் பரவச் செய்தவர்.

**‘தமிழாலயம்’** என்ற இலக்கிய இதழைத் தொடர்ந்து நடத்தி - தொய்விலாத் தமிழ்த் தொண்டாற்றியவர். காஞ்சிபுரத்தில் பணியாற்றிய காலத்தில், காஞ்சி தமிழ்ச் சங்கம் நிறுவியதுடன், **‘பாரதிதாசன் இலக்கியப் பேரவை’** என்ற அமைப்பினை அமைத்து, பல இலக்கிய நிகழ்ச்சிகளை அரசியல் நிகழ்ச்சிகளாக மாற்றிக் காட்டியவர்.

தமிழ்நாடு தமிழாசிரியர்கள் கழகத்தின் துணைத் தலைவர், பல்கலைக்கழகக் கல்லூரி ஆசிரியர் சங்கத்தின் சென்னை மண்டலத் தலைவராகவும் பொறுப்புகளை வகித்து, அரசுக்கும் ஆசிரியர்களுக்கும் நட்புப் பாலமாக சத்தமில்லாமல் பல சாதனைகளைச் செய்தவர்.

அவரது தமிழ்த் தொண்டு, திராவிட இலக்கியப் பணிகளைப் போற்றும் விதமாக 1990 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் சார்பில், **‘பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு பாவேந்தர் விருது’** அளித்து மகிழ்ந்தார், முதலமைச்சர் கலைஞர். அந்த விருதுடன் நிறுத்தவில்லை. 2005-ஆம் ஆண்டில் தலைமைக் கழகம் அளிக்கும் **‘பாவேந்தர் விருது’**க்கும் மு.பி.பா பெயரை முன்வைத்ததுடன், பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்ற விழாவில், தனது கரங்களால் வழங்கி அன்பு செய்தார். “மு.பி.பா, கலைஞரின் இதய உடன்பிறப்பு” என எழுதி இருந்தது ‘முரசொலி’.

## தணியாத ஆர்வம் கொண்டவர்

கல்வியாளராக, தமிழறிஞராக மட்டும் அவர் அறியப்பட்டவரல்ல. கிளைக் கழகச் செயலாளராகத் தொடங்கிய அவரது அரசியல் பணி, கழகத்தின் இலக்கிய அணியில் தலைமை நிர்வாகக் குழு உறுப்பினர், இலக்கிய அணித் தலைவர் என நீண்டது. வயது மூப்புக் காரணமாக ஓய்வில் இருந்த அவர், 2020 ஆம் ஆண்டில், உடல்நலக் குறைவு மற்றும் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டார்.


கழகத்தின் மூத்த முன்னோடியை, அண்ணாவின் தம்பியை, முத்தமிழறிஞரின் உடன்பிறப்பினை இழந்த வருத்தம் இன்றைய கழகத் தலைவரின் இரங்கல் அறிக்கையாகக் கண்ணீர் வடுவுடன் வந்தது.

“கழக இலக்கியப் பணிகளில் என்றைக்கும் தணியாத ஆர்வமும், தளராத ஊக்கமும் கொண்டவர்” எனப் போற்றியதுடன், “திராவிட இயக்கச் சிந்தனைகள் செழித்துப் பூத்து மணம் பரப்பும் மாபெரும் தோட்டமாகவே விளங்கியவர். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கழகத்தை விட்டுக் கொடுக்காமல் வாதம் செய்திடும் கொள்கைப் பிடிப்புள்ளவர். இந்த மாபெரும் திராவிட இயக்கம், தகுதியும் சான்றாண்மையும் நிறைந்த தனயர்களில் ஒருவரை இழந்து நிற்கிறது. அவரை இன்றைக்கு தமிழ்கூறு நல்லுலகம் இழந்திருக்கிறது; நானும் இழந்திருக்கிறேன்” என எழுதி இருந்தார்.

மு.பி.பா அவர்களை நாம் இழந்திருக்கலாம். ஆனால், “திராவிட இயக்கம் வளர்த்த தமிழ்” என எழுதும் வரலாற்றில் கழகத்தின் பெயரை தூக்கிச் சுமப்பார் மு.பி.பா.

...துடிக்கும்

## வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு!



சென்னை, மெட்ரோ ரயில் இரண்டாவது கட்டப் பணிகள், நகரின் 118 ரயில் நிலையங்களை இணைக் கும் வகையில், 128 கிலோ மீட்டருக்கு வடிவமைக்கப்பட்டது.

2021-ஆம் ஆண்டின் ஒன்றிய நிதி நிலை அறிக்கையில், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது கட்டப் பணிகளுக்கு, சுமார் 63 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என அறிவிக்கப் பட்டது. ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில் ஒரு ரூபாய்கூட ஒன்றிய அரசு நிதி ஒதுக்காமல் வஞ்சித்துள்ள விவரம், கடந்த சில நாட்களுக்கு முன் வெளியாகி இருந்தது. ஆனால், அதே ஆண்டு, கொச்சி, நாக்பூர், பெங்களூரு நகரங்களின் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஒன்றிய அரசு விடுவித்துள்ளது.

இந்த நிலையில், ‘சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது கட்டப் பணிகள் மாநில அரசின் திட்டமாகவே செயல்படுத்தப்படுவதால், மாநில அரசே செலவு செய்கிறது’ என ஒன்றிய அரசு பதில் அளித்துள்ளது. தி.மு.க நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் தோகன் சாகு எழுத்துப்பூர்வமாக அளித்துள்ள பதிலில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில் பணிகளுக்கான நிதியை வங்கிகளிடம் இருந்து கடன் பெற்று கட்டி வருவதாகவும், இதன் மூலம் மாநில அரசின் கடன் அளவு அதிகரிப்பதாகவும் தமிழ்நாடு அரசு வெளிப்படையாகவே அறிவித்தது. இந்த நிலையில்தான், மாநில அரசே செலவு செய்கிறது என, அதே பதிலை ஒன்றிய அரசு கூறி இருக்கிறது. தமிழ்நாட்டை எப்படியெல்லாம் வஞ்சிக்கலாம் என்பதைப் புதிய புதிய வழிகளில் ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் ஒன்று, மெட்ரோ ரயில் பணிகளுக்கான நிதி மறுப்பு.

## ஃப்ளாஷ்பேக்



இல.குட்டியப்பன்



### நன்றி அறிவிப்பும் பாராட்டும்!

1989-ஆம் ஆண்டு தேர்தலில், கழகம் மாபெரும் வெற்றி பெற்றது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்றார். இந்த வெற்றிக்கு, கழக இளைஞர் அணி பக்கபலமாக இருந்ததையொட்டி தமிழ்நாடு முழுக்க அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் நன்றி அறிவிப்புக் கூட்டத்துடன் இணைந்து, பாராட்டுக் கூட்டங்களையும் நடத்தினார். அப்போது நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியத்துக்கு வருகை தந்து, எங்களையும் பாராட்டி, தொடர்ந்து கழகப் பணியாற்ற ஊக்கமூட்டினார்.

**- இல.குட்டியப்பன், மொழிப் போர் தியாகி, வாசுதேவநல்லூர் நகரம், தென்காசி வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பெட்டி சாவி!

1948-ஆம் ஆண்டு அக்டோபரில் திராவிடர் கழக இந்தி எதிர்ப்பு மாநாடு, ஈரோட்டில் நடந்தது. 50 ஆயிரம் பேர் கூடினர். தந்தை பெரியார் நடத்திய மாநாட்டுக்கு பேரறிஞர் அண்ணா தலைமை வகித்தார். அன்றுதான் பெரியார் “பெட்டிச் சாவியை அண்ணா கையில் கொடுத்து விட்டேன்” என்றார். அதில், பெரியாரும் அண்ணாவும் திரு.வி.க.வும் ஆற்றிய உரைகள் மறக்க முடியாதவை.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

565

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.